மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.03/2022
அ.வ.எண்.52/2022

தங்கராஜ் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. பொன்னுசாமி
2. அருணாசலம்
3. மாவட்ட ஆட்சியர், சேலம்.
4. சார் ஆட்சியர், மேட்டூர்.
5. வட்டாட்சியர், மேட்டூர்
6. கிராம நிர்வாக அலுவலர், பள்ளிப்பட்டி கிராமம். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 15.04.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.முத்துசாமி அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.அழகேசன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாத நிலையிலும், 3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதி/மனுதாரரால் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/ எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளது. தாவா சொத்தானது பள்ளிப்பட்டி கிராமம்,

ச.எண்.282/1A1 ற்கு பட்டா எண்.1223 ல் கண்டுள்ள நிலம் மனுதாரரின் தந்தை சித்தன் என்பவருக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்தார். இந்நிலத்திற்கு இணை நிலமான அரசிற்கு சொந்தமான குன்று புறம்போக்கு ச.எண்.282/2 ஐயும் சேர்த்து மனுதாரரின் தந்தை மற்றும் அவரது வாரிசுகளும் விவசாயம் செய்து அனுபவித்து வந்தனர். மேலும் அதற்குண்டான அனைத்து வரிகளையும் அரசிற்கு செலுத்தி வந்தனர்.

(ii) மேற்படி நிலத்தின் வழியாக பொதுப்பாதை கிழக்கு மேற்காக பெருமாள் கோவில் செல்லும் ரோடு முதல் ஆமேரிக்காடு வரை செல்கிறது. மேற்படி வண்டிப்பாதையை மனுதாரரும், மற்றவர்களும் பொதுப்பாதையாக பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி வண்டிப்பாதையை தவிர பிரதான சாலையிலிருந்து தாவா சொத்திற்கு செல்ல வேறு வழியில்லை. மேற்படி பாதையானது அருகிலுள்ள மற்ற அனைத்து நில உரிமையாளர்களுக்கும் பொதுவானது. மனுதாரரின் நிலமானது பொது வண்டிப்பாதையின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது. 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் அருகிலுள்ள நில உரிமையாளர்கள் மற்றும் அவர்கள் மேற்படி பாதையின் வடக்கு பகுதியில் ச.எண்.283/4 ஐ அனுபவித்து வந்தனர். இந்நிலையில் 1, 2 எதிர்மனுதாரர்கள் கடந்த 10.10.2021 ம் தேதியில் மேற்படி வண்டிப்பாதையை மனுதாரர் பயன்படுத்துவதை பல்வேறு வகையில் இடையூறு செய்ததோடு, மேற்படி பொது வண்டிப்பாதையின் அமைப்பை மாற்றி, அதில் மக்காசோளத்தை அறுவடை செய்ததால், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராகவும், அரசாங்கத்தை தரப்பினராக சேர்த்தும் இவ்வழக்கை தாக்கல் செய்து, அதில் நீதிமன்ற ஆணையரை நியமித்து, தாவா சொத்தை ஆய்வு செய்து, அதன் அமைப்பு குறித்தும், பௌதீக தன்மைகள் குறித்தும், வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 5 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 3, 4, 6 ம் பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்:–</u>

<u>(பதிலுரை இம்மனுவின் 3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களால் அவர்களது எதிருரையாக குறிப்பாணையின் பேரில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. தாவா சொத்தானது பள்ளிப்பட்டி கிராமம், ச.எண்.282/1A1 ற்கு பட்டா எண்.1223 ல் கண்டுள்ள நிலம் மனுதாரரின் தந்தை சித்தன் என்பவருக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்ததாகவும், இந்நிலத்திற்கு இணை நிலமான அரசிற்கு சொந்தமான குன்று புறம்போக்கு ச.எண்.282/2 ஐயும் சேர்த்து மனுதாரரின் தந்தை மற்றும் அவரது வாரிசுகளும் விவசாயம் செய்து அனுபவித்து வந்ததாகவும், அதற்குண்டான அனைத்து வரிகளையும் அரசிற்கு செலுத்தி வந்ததாகவும் கூறுவது உண்மையல்ல. ச.எண்.282/2 பரப்பு 0.56.5 ஏர்ஸ் நிலம் குன்று என வகைப்பாடு செய்யப்பட்டு கிராம கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ii) இந்நிலத்தின் வழியாக பொதுப்பாதை கிழக்கு மேற்காக பெருமாள் கோவில் செல்லும் ரோடு முதல் ஆமேரிக்காடு வரை செல்வதாகவும், இந்த பாதையை மனுதாரரும், மற்றவர்களும் பயன்படுத்தி வருவதாகவும் கூறுவது உண்மையல்ல. இதை மனுதாரரே தக்க ஆவணம் மற்றும சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும். மேற்படி பட்டா மூலம் பாத்தியப்பட்ட சொத்திற்கு அருகிலுள்ள அரசுக்கு சொந்தமான குன்று என வகைப்பாடு கொண்ட தாவா சொத்தை பொறுத்து தனிப்பட்ட முறையில் மனுதாரரோ, 1, 2 ம் எதிர்மனுதாரர்களோ எவ்வித உரிமையும் கோர முடியாது. மேற்படி வண்டிப்பாதையை தவிர பிரதான சாலையிலிருந்து தாவா சொத்திற்கு செல்ல வேறு வழியில்லை என்பதையும், மேற்படி பாதையானது அருகிலுள்ள மற்ற அனைத்து நில உரிமையாளர்களுக்கும் பொதுவானது என்பதையும், மனுதாரரின் நிலமானது பொது வண்டிப்பாதையின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது என்பதையும், 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் அருகிலுள்ள நில உரிமையாளர்கள் மற்றும் அவர்கள் மேற்படி பாதையின் வடக்கு பகுதியில் ச.எண்.283/4 ஐ அனுபவித்து வருகின்றனர் என்பதையும் மனுதாரரே நிரூபிக்க வேண்டும்.

(iii) உண்மையில் பாதை இருந்திருந்தால் தாவா சொத்தில் பாதை எவ்வளவு அடி அகலம் மற்றும் நீளத்தில் செல்கிறது என்பதை மனுதாரர் தெரிவித்திருப்பார். வழக்குரை பத்திகளில் கண்டுள்ள சங்கதிகளுக்கும், இந்த எதிர்மனுதாரர்களுக்கும் எவ்வித

சம்மந்தமும் கிடையாது. மனுதாரருக்கும், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கும் இருக்கும் தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக அரசாங்க அதிகாரிகளை தேவையற்ற தரப்பினர்களாக இவ்வழக்கில் சேர்த்துள்ளனர். அரசு நிலத்தை அபகரிக்கும் நோக்கோடு மனுதாரர் இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார். பிரிவு 80 சிபிசியின் படி வழக்கு தாக்கல் செய்யும் முன் அறிவிப்பு அனுப்பப்பட வேண்டும் என்பது அவசியமான ஒன்றாகும். அவ்விதம் அனுப்பாமல் வழக்கிட்டது சட்டவழியை தவறாக பயன்படுத்தப்பட்டதாகும். இதன்மூலம் எவ்வித உரிமையும் ஏற்படுவதில்லை. எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் ச.எண்.282/1A1 ல் உள்ள நிலம் மனுதாரரின் தந்தைக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலம் என்றும், இதற்கு இணை நிலமான ச.எண்.282/2 ல் உள்ள அரசிற்கு சொந்தமான குன்று புறம்போக்கு நிலத்தையும் சேர்த்து மனுதாரரும், அவரது முன்னோர்களும் அனுபவித்து வந்தனர் என்றும், மனுதாரரின் பட்டா நிலத்திற்கு கிழக்கே மேற்படி ச.எண்.282/2 ல் கிழமேலாக தாவா பொது வண்டிப்பாதை பெருமாள் கோவில் செல்லும் ரோடு முதல் ஆமேரிக்காடு வரை செல்கிறது என்றும், மேற்படி பொது வண்டிப்பாதையை மனுதாரரும், ஊர் மக்களும் பயன்படுத்தி வந்தனர் என்றும்,

மேற்படி வண்டிப்பாதையை தவிர பிரதான சாலையிலிருந்து மனுதாரரின் சொத்திற்கு செல்வதற்கு வேறு மாற்று வழித்தடம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ii) மேலும் மேற்படி பொது வண்டிப்பாதையின் வடக்கு பகுதியில் ச.எண்.283/4 ல் உள்ள நிலத்தை 1, 2 எதிர்மனுதாரர்கள் அனுபவித்து வந்தனர் என்றும், கடந்த 10.10.2021 ம் தேதியில் 1, 2 எதிர்மனுதாரர்கள் தாவா வண்டிப்பாதையை மனுதாரர் பயன்படுத்துவதற்கு இடையூறு செய்ததோடு, மேற்படி பொது வண்டிப்பாதையின் அமைப்பை மாற்றி, அதில் மக்காசோளத்தை விவசாயம் செய்துவிட்டதால் மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்து, அதில் நீதிமன்ற ஆணையரை நியமித்து, தாவா சொத்தை ஆய்வு செய்து, அதன் அமைப்பு குறித்தும், பௌதீக தன்மைகள் குறித்தும், வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) அதே சமயத்தில் 1, 2 எதிர்மனுதாரர்கள் இம்மனுவில் தோன்றாதரப்பினர்களாகியுள்ள நிலையில், 3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரருக்கு பட்டா மூலம் பாத்தியப்பட்ட சொத்திற்கு அருகிலுள்ள அரசுக்கு சொந்தமான குன்று என வகைப்பாடு கொண்ட ச.எண்.282/2 ல் உள்ள நிலத்தை பொறுத்து தனிப்பட்ட முறையில் மனுதாரரோ, 1, 2 ம் எதிர்மனுதாரர்களோ எவ்வித உரிமையும் கோர முடியாது என்றும், உண்மையில் மேற்படி அரசாங்கத்திற்கு சொந்தமான நிலத்தில் எவ்வித பொது வண்டிப்பாதையும் இல்லை என்றும், உண்மையில் பாதை இருந்திருந்தால் அதன் நீள, அகலங்களை மனுதாரர்கள் வழக்கில் குறிப்பிட்டிருப்பார் என்றும், மனுதாரருக்கும், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கும் இடையே உள்ள தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக அரசாங்க அதிகாரிகளை தேவையற்ற தரப்பினர்களாக இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ளனர் என்றும், எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

(iv) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் வாதி/மனுதாரரால் ச.எண்.282/2 ல் உள்ள அரசு குன்று நிலத்தில் செல்லும் வண்டிப்பாதையை

பயன்படுத்துவதற்கு மனுதாரருக்கு உரிமையுள்ளது என விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா வண்டிப்பாதையை மனுதாரர் பயன்படுத்துவதை 1ம் எதிர்மனுதாரர் எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மாற்றி அமைக்கப்பட்ட தாவா வண்டிப்பாதையின் அமைப்பை அதன் இயல்பு நிலைக்கு மாற்றி கொடுக்க வேண்டும் என செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் 3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் ச.எண்.282/2ல் உள்ள நிலத்தை பொறுத்து மனுதாரருக்கோ, 1, 2 எதிர்மனுதாரர்களுக்கோ எவ்வித தனிப்பட்ட உரிமையும் இல்லை என்றும், உண்மையில் மேற்படி சர்வே எண்ணில் அவ்வாறு எவ்வித தடவழியும் இல்லை என்றும், எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(v) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் மதிப்புமிக்க வாதங்களை கருத்தில் கொள்கையிலும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையிலும், ச.எண்.282/2ல் கிழமேலாக பொது வண்டித்தடம் செல்வதாகவும், அதை மனுதாரரும், ஊர் மக்களும் பயன்படுத்தி வருவதாகவும் மனுதாரர் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிக்க வேண்டிய நிரூபண சுமை மனுதாரரையே சார்ந்ததாகும். மேலும் மேற்படி பொது வண்டித்தடத்தை தவிர்த்து தன் பட்டா நிலத்திற்கு பிரதான சாலையிலிருந்து செல்வதற்கு வேறு மாற்றுத் தடவழி இல்லை என தெரிவித்துள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி சங்கதிகளை நிரூபிப்பதற்கு மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) அதே சமயத்தில், ச.எண்.282/2ல் மனுதாரர் சுவாதீனத்தில் உள்ளாரா? என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற ஆணையரை நியமிக்க இயலாது என்பதையும், அவ்வாறு நியமித்தால் அது சாட்சியங்களை திரட்டுவதாக அமைந்துவிடும் என்பதையும் இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. ஆகவே இங்கு நீதிமன்ற ஆணையரின் பணி மிகவும் வரையறுக்கப்பட்ட அளாவுகை (Limited Scope)கொண்டது என்பதால், நீதிமன்ற ஆணையர் ச.எண்.282/2ல் உள்ள நிலத்தை பார்வையிட்டு,

அதன் பௌதீக தன்மைகள் குறித்தும், மேற்படி நிலத்தில் மனுதாரர் கூறுவதுபோல் ஏதேனும் பொது வண்டித்தடம் உள்ளதா? என்பது குறித்து மட்டும் ஆய்வு செய்து, அவ்வாறு உள்ளது எனில் அதன் அளவுகள் குறித்தும், மேற்படி பொது வண்டித்தடம் எந்த சர்வே எண்ணில் தொடங்கி எந்த சர்வே எண்ணில் முடிவடைகிறது என்பது குறித்தும், தாக்கல் செய்யும் அறிக்கையானது இவ்வழக்கை தீர்மானிப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதாலும், நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்யும் அறிக்கையானது இவ்வழக்கில் தரப்பினரிடையே உள்ள பிரச்சனைகளுக்கு முழுமையான ஒரு தீர்வு காண்பதற்கு உதவியாக இருக்கும் என்பதாலும், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, மனு அனுமதிக்கப்பட்டும், செல்வி.S.சாரதா வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் ச.எண்.282/2ல் உள்ள நிலத்தை பார்வையிட்டு, அதன் அமைப்பு மற்றும் பௌதீக தன்மைகள் குறித்தும், மேற்படி நிலத்தில் ஏதேனும் வண்டிப்பாதை உள்ளதா? என்பது குறித்தும், அவ்வாறு உள்ளது எனில், அதன் அமைப்பு மற்றும் நீள, அகலங்கள் குறித்தும், இருதரப்பினராலும் முன்னிலைப்படுத்தப்படும் ஆவணங்கள் மற்றும் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலித்து, அளவுகளுடன் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணம் ரூ.7500/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் கட்டணத்தை மனுதாரர் நேரடியாக செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. கற்றறிந்த நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு வழங்கியதற்கு பின்னிட்டு தாவா சொத்தை பார்வையிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் காலதாமதமின்றி விரைவாக அறிக்கை தாக்கல் செய்வதற்கு ஆவண செய்ய அறிவுறுத்தப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய அழைக்க.18.07.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம்

ஆண்டு ஜுன் மாதம் 18 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.06.18 16:23:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :– இல்லை</u>
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

எ.ம.சா.ஆ.1 06.06.2022 அ பதிவேடு உண்மைநகல்
எ.ம.சா.ஆ.2 06.06.2022 புல வரைபடம் உண்மைநகல்

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.06.18 16:23:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.